செய்தி வெளியீடு **நாள் : 16.08.2024**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் ரூ.53.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த கொளத்தூர் வண்ண மீன்கள் சந்தை (Kolathur Ornamental Fish Market) அமையவுள்ள இடத்தினை

மாண்புமிகு அமைச்சர்கள் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று களஆய்வு செய்தனர்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (16.8.2024) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனி, பாடி மேம்பாலத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் **சுமார் 4 ஏக்கர்** பரப்பளவில் **ரூ.53.50 கோடி மதிப்பீட்டில்** கட்டப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த **கொளத்தூர் வண்ண மீன்கள் சந்தை (Kolathur Ornamental Fish Market)** அமைப்பதற்கான இடத்தினை மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தனர்.

மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மரியாதைக்குரிய தளபதி அவர்கள் கலர்மீன்கள் உற்பத்தியாளர்கள் தொழில் மேற்கு வங்கத்தில்தான் அதிகமான தொழிலாக நடந்து வருகிறது. அதற்கு அடுத்தாற்போல் பார்த்தோம் என்றால் தமிழ்நாட்டை எடுத்துகொண்டால் கொளத்தூர் பகுதியில் அமைந்திருக்கின்ற ஏறக்குறைய 250 கலர்மீன் வகைகளை உற்பத்தி செய்து பல்வேறு இடங்களுக்கு விற்பனை செய்கிறார்கள். ஏறக்குறைய 2500 முதல் 3000 தொழிலாளர்கள் அதில் பணிபுரிகிற வகையிலே செயல்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** இந்த தொழிலை தமிழகத்தின் முதன்மை தொழிலாக மாற்ற வேண்டும் என்ற வகையிலே கலர் மீன்கள் உற்பத்தியை முதன்மை தொழிலாக மாற்ற வேண்டும் என்கிற வகையில் இதை சிறப்பாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி இன்று இந்த பகுதியிலே ஏறக்குறைய 4 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத்தரத்தில் வண்ண மீன்கள் விற்பனை செய்கின்ற வகையிலும் அங்காடியை பல்வேறு தரப்பட்ட மக்கள் அதிகளவில் பார்க்க வேண்டும் என்ற வகையிலும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவின்பேரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.53.50 கோடி மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டிடமானது அமையவுள்ளது. இதை நடைமுறைபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் மற்றும்

Verified @ RealEstate ™

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு மேயர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களுடன் இந்த உலகத்தரம் வாய்ந்த வண்ண மீன்கள் சந்தை வெகுவிரைவில் தொடங்குவதற்கான வழிவகைகள் செய்வதற்கு இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன் அவர்கள், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவர் திரு.ப.ரங்கநாதன் அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைப் பொறியாளர் (மாநகராட்சி) திரு.எஸ்.இராஜேந்திரன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு.ஜி.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி.ஜி.ரேணுகாதேவி, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மாநகராட்சி அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™